[1979 பிப்ரவரி 12]

கட்டிடம் கட்டுவதற்காகவும், பணிகளைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்காகவும், அரசு மானியம் வழங்கியுள்ளது. மதுரையில் வரும் ஆண்டில் நடை பெற இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டுக்கான ஆரம்ப வேலைகளை முனைப்பாக மேற்கொண்டு, முதற் கட்டமாக 50,000 ரூபாய் நிதி உதவியையும் அரசு அளித்துள்ளது. மேலும் அரசுக் கலைஞர்களாக எட்டு கலை விற்பன்னர்களை அரசு அண்மையில் பாராட்டி, பரிசுகளும், உதவித் தொகையும் வழங்கியுள்ளது அனைவரும் பாராட்டுதற்குரியதாகும்.

27. இந்தி மொழி எவர் மீதும் சுமத்தப்படலாகாது என்பதிலும், இரு மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் பின்பற்றப்பட வேண்டுமென்பதிலும், இந்த அரசு அசையாத நம்பிக்கை கொண்டுள்ளது. மொழித் திணிப்பு ஏற்றுக் கொள்ளப்படலாகாது என்பதில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா கட்சிகளும் ஒருமித்த எண்ணம் கொண்டுள்ளன என்பது வெளிப்படையாகும். இக் கருத்துக்களை ஒருமுகப்படுத்துவதற்கு அண்மையில் அரசு கூட்டிய அனைத்துக் கட்சிகள் மாநாடு ஏற்றதொரு செயலாகும். கட்சி வேறுபாடின்றி தமிழக மக்கள் அனைவரின் உள்ளக் கிடக்கையை பிரதிபலிக்கும் வகையில் ஏற்ற நடவடிக்கைகளை அரசு எடுப்பதற்கு சட்ட மன்றம் உறுதுணையாக செயல்படுமென நம்புகிறேன்.

28. ஜனநாயக அமைப்பு முறையில், கருத்துப் போராட்டங்கள் ஏற்படுவது இயற்கை ; ஆக்க பூர்வமான முடிவிற்கும் செயலாற்றலுக்கும், அவை தவிர்க்க முடியாதவை. எண்ணங்களை பரிமாறிக் கொள்ளும்போதும் அவைகளை எடுத்து வைக்கும் முயற்சிகளின்போதும், நபருக்கு நபர், கட்சிக்குக் கட்சி, கடைப்பிடிக்க வேண்டிய நெறி, காந்தீய நெறி, அண்ணா வழி என்பதில் யாருக்கும் வேறுபட்ட கருத்திருக்க முடியாது ; பிரச்சினைகளுக்குப் பரிகாரம் பழி வாங்கிடும் வன்முறை உணர்ச்சியின் மூலம்தான் முடியும் என்ற அபாயகரமான போக்கிற்கு நிச்சயமாக முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அமைதிக்கும், ஆழ்ந்த சிந்தனைக்கும், நயத்தக்க நாகரீகத்திற்கும் நாடு போற்றிடும் நன்னோக்கிற்கும் தனிப் பாரம்பரியம் பெற்ற தமிழகத்தில் அண்மைக் காலமாக சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது எனது அரசிற்கு வேதனையைத் தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். குறிப்பாக நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர், திரு. முருகையன் அவர்கள், படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி மெத்த வேதனையைத் தருகிறது. கொலைக்குக் காரணமானவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதை உறுதியாகக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டுமிராண்டித்தனமான இந்தக் கொலை வெறியை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவோ மொழி, சாதி, மதம் காரணமாகவோ தமிழகம் அமைதி இழக்காத அளவிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி,